## Ang Mo Kio Heritage Trail
## அங் மோ கியோ மரபுடைமைப் பாதை

**அங் மோ கியோ மரபுடைமைப் பாதை**, சிங்கப்பூரிலுள்ள இடங்களின் வரலாற்று, சமூக நினைவலைகளை ஆவணப்படுத்தி படைக்கும் நோக்கத்துடன் தேசிய மரபுடைமைக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இவ்வட்டாரத்தில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள், அல்லது விளையாடியவர்களுக்கு இனிமையான அக்கால நினைவுகளை இப்பாதை ஞாபகப்படுத்தும் என்றும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயன்மிக்கத் தகவல் வளமாகப் பயன்படும் என்றும் நம்புகிறோம்.

---

### Ang Mo Kio Town Centre
### அங் மோ கியோ நகர மையம்

அங் மோ கியோ நகர மையம் 1970களின் பிற்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டபோது, சிங்கப்பூரின் ஆகப்பெரிய நகர மையங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. பலதுறை மருந்தகம், நூலகம், கடைத்தொகுதிகள் போன்ற முக்கிய வசதிகளுடன், ஏறக்குறைய 245,000 குடியிருப்பாளர்களுக்குச் சேவை வழங்கும் வகையில் நகர மையம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த நகர மையத்தில், முன்னாள் ஓரியண்டல் எம்போரியம் 1979ல் திறந்தது. சீனாவிலிருந்து இறக்குமதியான பொருட்களுக்காகக் குடியிருப்பாளர்கள் அங்கு அடிக்கடி சென்றனர். குறிப்பாக சீனப் புத்தாண்டு போன்ற விழாக் காலங்களில் பீஷான் போன்ற அக்கம்பக்கக் குடியிருப்பு நகரங்களிலிருந்தும் வாடிக்கையாளர்களை எம்போரியம் ஈர்த்தது,. அங்கிருந்த ஆடம்பரமான சீன உணவகம், பிறந்தநாள், திருமணம் போன்ற கொண்டாட்டங்களுக்குப் பிரபலமாக இருந்தது. நகர மையத்தில் நான்கு திரையரங்குகளும் இருந்தன - பிராட்வே தியேட்டர், அங் மோ கியோ சினிமா, ஜூபிலி தியேட்டர், நியூ கிரவுன் மற்றும் நியூ டவுன் சினிமா.

1980களின் பிற்பகுதியிலும் 1990களிலும், சிங்கப்பூருக்கு வருகையளித்த பிரமுகர்களிடம் சிங்கப்பூரின் பொதுக் குடியிருப்புச் சாதனைகளைக் காட்டுவதற்காக, அங் மோ கியோ நகரம் சுற்றிக் காட்டப்பட்டது. நகர மையத்தில் இருந்த புளோக் 710, அந்தக் காலகட்டத்தில் "விஐபி புளோக்"


என்றழைக்கப்பட்டது. காலஞ்சென்ற இரண்டாம் எலிசபெத் ராணியார், சீனப் பிரதமர் லீ பெங் உள்ளிட்ட பிரமுகர்கள், அந்த அடுக்குமாடிக் கட்டடத்திலிருந்து அங் மோ கியோ புதுநகரின் பரந்த காட்சியைக் கண்டு ரசித்துள்ளனர்.

காலப்போக்கில் நகர மையம் சீரமைக்கப்பட்டு, புதிய மேம்பாடுகள் அறிமுகமாயின. அவற்றுள் ஒன்றாக, அங் மோ கியோ நடுவம் 2007ல் திறக்கப்பட்டது. இந்த நடுவம், , பெருவிரைவு ரயில் பாதையையும் பேருந்து நிலையத்தையும் ஒருங்கிணைக்கிறது. குடியிருப்பாளர்களின் மாறிவரும் தேவைகளை நகர மையம் தொடர்ந்து நிறைவேற்றுவதை இந்த மேம்பாடுகள் உறுதி செய்தன.



பின்னணியில் புளோக் 710 தென்படும் அங் மோ கியோ நகர மையம், 1981

*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*



அங் மோ கியோ நகர மையத்தில் முன்பு அமைந்திருந்த ஓரியண்டல் எம்போரியம், 1979

*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*




நியூ டவுன், நியூ கிரவுன் திரையரங்குகள், 1984
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



இரண்டாம் எலிசபெத் ராணியார் புளோக் 710ல் அங் மோ கியோ நகரைச் சுற்றிப் பார்க்கிறார், 1989
*தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

## Masjid Al- Muttaqin
## மஸ்ஜித் அல்-முத்தாகின்

மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசலை, முயிஸ் எனும் சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்திற்காக ) வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் 1980ல் கட்டியது. இறைவன்மீது நிலையான பற்றுகொண்ட பக்தர்களைக் குறிப்பிடும் “அல்-முத்தாகின்” என்ற பெயர் பள்ளிவாசலுக்கு வைக்கப்பட்டது.

மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசல் கட்டப்படுவதற்குமுன், அங் மோ கியோவில் வசித்துவந்த முஸ்லிம்கள் தாம்சன் சாலை, கம்போங் சிரே, பெங் கெக் அவென்யூ ஆகிய வட்டாரங்களில் அமைந்திருந்த பள்ளிவாசல்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. முஸ்லிம்

குடியிருப்பாளர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவும் தோழமையும் வழங்க, அக்கம்பக்கக் குழுக்களை அமைத்தனர். ரமலான் மாதத்தில், அடுக்குமாடிக் கட்டடக் கீழ்த்தளங்களில் நோன்பு திறக்க அவர்கள் ஏற்பாடு செய்தனர்.


இந்நிலையில், தங்களுக்கென சொந்தப் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டும் திட்டத்தை முஸ்லிம் சமூகத்தினர் 1970களின் பிற்பகுதியில் பரிந்துரைத்தனர். கட்டுமானச் செலவில் பெரும்பகுதியை முயிஸ் ஏற்றுக்கொண்ட போதிலும், நன்கொடைகள் மூலமும் கேளிக்கைச் சந்தைகளில் உணவு விற்பனை செய்தும் கட்டுமானச் செலவில் ஒரு பகுதியைச் சமூகத்தினர் திரட்டினர். பள்ளிவாசலின் நிலம் அகழும் சடங்கு 1979ல் நடந்தேறியது. லெம்பாகா பியாசிஸ்வா கெனங்கான் மௌலுத் கழகத்தின் (மலாய் மொழியில் "PMBM கல்வி உபகாரச்சம்பள நிதிக் கழகம்) நிறுவனரும் தலைவருமான சையத் அலி ரிதா அல்சகொஃப், அந்தச் சடங்கில் கலந்துகொண்டார். கேலாங் செராய் தொகுதிக்கான அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஹாஜி ரஹ்மத் கெனாப், 1980 செப்டம்பர் 21ல் பள்ளிவாசலை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இன்று, அங் மோ கியோவில் வசிக்கும் முஸ்லிம்களுக்கு ஆன்மீக, சமூக வாழ்க்கை மையமாக மஸ்ஜித் அல்-முத்தாகின் சேவையாற்றுகிறது. அங் மோ கியோ நகர மைய நுழைவாயில்களில் ஒன்றில் அமைந்துள்ள பழக்கப்பட்ட நினைவுச்சின்னமாகப் பள்ளிவாசல் திகழ்கிறது.



மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசலின் நிலம் அகழும் சடங்கில் கலந்துக்கொண்ட சையத் அலி ரிதா அல்சகொஃப், 1979

*மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசலின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசலின் கட்டுமானப் பணி, 1979

*மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசலின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



நோன்புப் பெருநாளின் முதல் நாளன்று, முஸ்லிம்கள் பள்ளிவாசலில் கூடியுள்ளனர், 1997

*மஸ்ஜித் அல்-முத்தாகின் பள்ளிவாசலுக்கு நன்றி*

---


**Former Cheng San**
**முன்னாள் செங் சான்**

அங் மோ கியோ நகரக் கிழக்குத் தோட்டம் ஆரம்பகாலத்தில் செங் சுவா லாய் (ஹாக்கியன் மொழியில் "பச்சை குன்றுகளுக்கு உள்ளே") அல்லது செங் சான் (ஹாக்கியன் மொழியில் "பச்சை குன்றுகள்") என்றழைக்கப்பட்ட பெரிய நிலப்பரப்பின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. 1970களுக்கு முந்திய காலத்தில், செங் சான் வட்டாரம் முன்னாள் செங் சான் சாலை நெடுகிலும் நீட்டித்திருந்தது. செம்பவாங் ஹில்சில் இருந்து இன்றைய அங் மோ கியோ அவென்யூ 3க்கு நேரிணையான சிராங்கூன் கார்டன் வரை முன்னாள் செங் சான் சாலை அமைந்திருந்தது.

செங் சான் வட்டாரத்தின் பெரும்பகுதி ரப்பர் தோட்டங்களாகவும் பண்ணைகளாகவும் இருந்தது. ஒவ்வொரு நூறு மீட்டர் தூரத்தில் வீடுகள் ஆங்காங்கே இருந்தன. அந்த வட்டாரத்தைச் சென்றடைவது பெரும் சிரமம். அதனால், 1960களில் அரசியல் கட்சிகள் தேர்தலின்போது ஆதரவு திரட்ட சிறிய விமானங்களிலிருந்து பிரசாரக் கையேடுகளைக் கீழே போட்டதாக முன்னாள் கிராமவாசிகள் கூறினர். இவ்வட்டாரத்தில் வசித்த கிராமவாசிகள் பெரும்பாலோர் ஹாக்கியன், தியோச்சூ பிரிவினரை சேர்ந்தவர்கள். ஆகையால், , கிராமத்துப் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்க 1945ல் சீனப் பள்ளியாக இன்றைய ஜிங் ஷான் தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டது..

செங் சான் வட்டாரம் 1970களில் சீரமைக்கப்பட்டது. அங்கு வசித்துவந்த மக்கள், அங் மோ கியோவிலும் சுற்றுவட்டார நகரங்களிலும் இருந்த குடியிருப்புப் பேட்டைகளில் குடியேற்றப்பட்டனர். செங் சானின் ஒரு பகுதி, அங் மோ கியோ நகரக் கிழக்குத் தோட்டமாக மாற்றப்பட்டது. அப்பகுதியின் இயற்கையான மேட்டு நிலத்தையும் தாவரங்களையும் முடிந்தவரை தக்கவைக்கும் வகையில், வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் பூங்காவை வடிவமைத்து 1981ல் கட்டி முடித்தது.

இந்தப் பூங்காவுக்குச் செல்வோர், செங் சான் கம்பத்து நாட்களை நினைவுபடுத்தும் ரப்பர், பழ மரங்களையும் இன்றும் அங்கு காணலாம். நடைபாதைகளை அலங்கரிக்கும் ரப்பர் விதை சிற்பங்களும், அந்த வட்டாரத்தின் கடந்தகாலத்தை நினைவுபடுத்துகின்றன.



இன்றைய சிராங்கூன் கார்டனுக்கு அருகே, செங் சான் சாலைப் பகுதியின் விவரங்களைக் காட்டும் வரைபடம், 1970

*சிங்கப்பூர் நில ஆணையத்தின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



செங் சானில் இருந்த கம்பத்து வீடுகள், தேதியில்லை
*ரோனி லிம்முக்கு நன்றி*



செங் சானில் இருந்த தன் வீட்டின் முன்புறத்தில் நிற்கும் கிராமவாசி, தேதியில்லை
*ரோனி லிம்முக்கு நன்றி*



புதிதாகக் கட்டப்பட்ட அங் மோ கியோ நகரக் கிழக்குத் தோட்டத்தைக் காட்டும் புகைப்படம், 1981
*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*

---

**Ang Mo Kio Town Garden West**
**அங் மோ கியோ நகர மேற்குத் தோட்டம்**

1983ல் பூர்த்தியடைந்த அங் மோ கியோ நகர மேற்குத் தோட்டமே, வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் அந்தக் காலகட்டத்தில் கட்டிய ஆகப்பெரிய நகரத் தோட்டமாகும். ஏறக்குறைய $2.7 மில்லியன் செலவில் 21 ஹெக்டர் நிலப்பரப்பில் கட்டப்பட்ட இந்தத் தோட்டத்தை, ஒபாயாஷி குமி எனும் ஜப்பானிய நிறுவனம் வடிவமைத்தது.

அங் மோ கியோ நகரக் கிழக்குத் தோட்டத்தைப் போலவே, இந்தத் தோட்டத்தின் வடிவமைப்பிலும் அப்பகுதியின் இயற்கையான நில அமைப்பும் தாவரங்களும் உள்ளடக்கப்பட்டன. அங் மோ கியோ ஒரு குடியிருப்பு நகரமாக மேம்படுத்தப்படுவதற்குமுன், அங்கு நிறைய குன்றுகள் இருந்தன. தற்போது அங்கு எஞ்சியிருக்கும் குன்றுகளில் ஒன்றான 30 மீட்டர் உயரக் குன்றை இந்தத் தோட்டத்தில் காணலாம். தோட்டம் முதன்முதலில் திறக்கப்பட்டபோது, பனை மரங்கள் புடைசூழ்ந்த அற்புதமான நுழைவாயில், பார்வையிடும் தளத்திற்கு இட்டுச்செல்லும் அடுக்குப்படிகள், தாமரைக் குளம் போன்றவையும் தோட்டத்திற்கு அழகு சேர்த்தன.

தோட்டம் அமைக்கப்படுவதற்குமுன், அந்த நிலப்பகுதி சின் பா (ஹொக்கியன் மொழியில் “புதிய வனத் தோட்டம்”) என்றழைக்கப்பட்ட பெரிய நிலப்பரப்பின் ஒரு பகுதியாக இருந்தது. சின் பா நிலப்பரப்பு, இன்றைய அங் மோ கியோ நகர மேற்குத் தோட்டத்திலிருந்து சிராங்கூன் கார்டன்ஸ் வரை நீண்டிருந்தது. சின் பா நிலப்பரப்பில் காடுகள், ரப்பர் தோட்டங்கள், காய்கறித் தோட்டங்கள், சில கிராமங்கள் ஆகியன இருந்தன. அந்தத் தோட்டங்களையும் காடுகளையும் நினைவுபடுத்தும் சில பகுதிகளை இந்த நகரத் தோட்டத்தில் இன்றும் காணலாம்.

அங் மோ கியோ குடியிருப்பாளர்களுக்கு, பொழுதுபோக்கவும் உடற்பயிற்சி செய்யவும் உகந்த இடமாகத் திகழும் நகரத் தோட்டம், பட்டாம்பூச்சிகளைப் பார்வையிடப் பலரும் நாடிச்செல்லும் இடமாகவும் திகழ்கிறது. தோட்டத்தின் மேற்குப் பகுதியில், கெபுன் பாரு பாடும் பறவை மன்றம் 1987ல் தொடங்கப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைக் கூண்டுகளுக்கு இடமுள்ள சிங்கப்பூரின் ஆகப்பெரிய பாடும் பறவை காட்சிப் பகுதி இது.



அங் மோ கியோ மேம்படுத்தப்படுவதற்குமுன் அதன் நிலவியல் எப்படி இருந்தது என்பதைக் காட்டும் வரைபடம். அங் மோ கியோ நகர மேற்குத் தோட்டம் கட்டப்பட்ட குன்றை நடுப்பகுதியில் காணலாம், 1970

*சிங்கப்பூர் நில ஆணையத்தின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



வானிலிருந்து எடுக்கப்பட்ட அங் மோ கியோ நகர மேற்குத் தோட்டப் புகைப்படம், 1982

*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*



கெபுன் பாரு பாடும் பறவை மன்றத்தில் அமைந்துள்ள பறவைக்கூண்டு கம்பங்கள், 2023

*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

**Ang Mo Kio Town Council**
**அங் மோ கியோ நகர மன்றம்**

சிங்கப்பூரில் தொடங்கப்பட்ட முதல் நகர மன்றம் அங் மோ கியோ நகர மன்றம். இது 1986ல் செயல்படத் தொடங்கியது. கெபுன் பாரு தொகுதிக்கான அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் லிம் பூன் ஹெங், குடியிருப்பாளர்கள் ஒரு மன்றத்தின் மூலமாகத் தங்களது குடியிருப்பு நகரைப் பராமரிக்கும் யோசனையை 1986ல் அவர் பரிந்துரைத்தார். இந்தப் பொறுப்புகளை வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (வீவக) ஒரு மன்றத்திற்கு மாற்றுவதன்வழி, குடியிருப்பு நகர நிர்வாகத்தில் குடியிருப்பாளர்கள் அதிக ஈடுபாடுவார்கள் என கருதப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் அங் மோ கியோ புதிதாகக் கட்டப்பட்டிருந்ததால், முன்னோட்ட நகர மன்றத்தை அறிமுகப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டது. பழைய குடியிருப்பு நகரங்களைவிடப் புதிய நகரில் பராமரிப்புப் பிரச்சனைகள் குறைவாக இருக்கும் என்பதால், புதிய மன்றத்தைச் செயல்படுத்திப் பார்க்க அதிக கால அவகாசம் கிடைக்கும் எனக் கருதப்பட்டது. மேலும், அங் மோ கியோ நகரில் வலுவான அடித்தளக் கட்டமைப்பு நிலவியதால், குடியிருப்பாளர்களை ஈடுபடுத்துவதும் எளிதாக இருக்கும். எனவே, அங் மோ கியோ வெஸ்ட், அங் மோ கியோ ஈஸ்ட், அங் மோ கியோ சவுத் என மூன்று நகர மன்றங்கள் 1986ல் அமைக்கப்பட்டன. அங் மோ கியோவில் அமைந்திருந்த வீவக-வுக்குச் சொந்தமான அலுவலகங்களில் நகர மன்றங்கள் செயல்பட்டன.

அங் மோ கியோவில் நகர மன்றம் அமைக்கும் முன்னோட்டத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடன், தங்களது நகரை மேம்படுத்துவதற்கான யோசனைகளைக் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கத் தொடங்கினர். உணவங்காடி நிலையங்களின் உட்கூரைகளில் மின்விசிறிகள் பொருத்துதல், நகரிலுள்ள அடுக்குமாடிக் கட்டடங்களையும் பேருந்து பயணப் பாதைகளையும் காட்டும் வரைபடங்களை நிறுவுதல் போன்றவை அவற்றுள் சில.

முன்னோட்ட அறிமுகம் வெற்றி அடைந்ததால், 1988ல் நகர மன்றச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை, நமது பொதுக் குடியிருப்பு நகரங்களைப் பராமரிக்கும் அத்தியாவசியப் பொறுப்பை நகர மன்றங்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன.



அங் மோ கியோ ஈஸ்ட் நகர மன்றத்தின் அலுவலகக் கட்டடம், 1988
*அங் மோ கியோ நகர மன்றத்திற்கு நன்றி*


அங் மோ கியோ ஈஸ்ட் நகர மன்ற அதிகாரிகள் கட்டடத்தில் பணிபுரிகின்றனர், 1989
*அங் மோ கியோ நகர மன்றத்திற்கு நன்றி*


அங் மோ கியோவில் வசிக்கும் மக்களுக்காக நகர மன்றமும் வசிப்போர் குழுவும் கூட்டாக ஏற்பாடு செய்த கேளிக்கை விழா, 1986
*அங் மோ கியோ நகர மன்றத்திற்கு நன்றி*

---

**Ang Mo Kio Joint Temple**
## அங் மோ கியோ கூட்டுக் கோயில்

முதன்முதலாக 1978ல் தொடங்கப்பட்டு, 2011ல் மீண்டும் புதிதாகக் கட்டப்பட்ட அங் மோ கியோ கூட்டுக் கோயிலில், முன்னாள் அங் மோ கியோ கிராமங்களிலிருந்த மூன்று கோயில்கள் அமைந்துள்ளன. காவ் லின் கொங், கிம் இயங் டொங், லெங் சான் கியாம் ஆகிய மூன்று

கோயில்களும், 1970களில் கிராமப்பகுதிகள் மேம்படுத்தப்பட்டபோது தற்போதைய அமைவிடத்திற்கு மாறிச்சென்றன.

Gao Lin Gong
காவ் லின் கொங்

மூன்று கோயில்களில் ஆகப் பழமையானது காவ் லின் கொங் கோயில். சீனாவின் ஃபூஜியன் மாநிலத்திலுள்ள நன் ஆன் மாவட்டத்திலிருந்து குடிபெயர்ந்த "ஹுவாங்" குடும்பப் பெயர் கொண்ட குடியேறிகள், 1888ல் இக்கோயிலை அமைத்தனர். இன்றைய அங் மோ கியோ அவென்யூ 1ன் நெடுகிலிருந்த ஒரு பகுதியான காவ் தியான் கியோ (ஹாக்கியன் மொழியில் "ஒன்பது பாலங்கள்") எனும் இடத்தில்தான் இந்தக் கோயில் ஆரம்பத்தில் அமைந்திருந்தது. நோயிலிருந்து குணமடைய இறையருளும், விவசாயம், நல்வாழ்வு குறித்து ஆலோசனையும் பெற விரும்பிய உள்ளூர் மக்கள் இக்கோயிலுக்குச் சென்றனர். காவ் லின் கொங் கோயில் ஆரம்பத்தில் அமைந்திருந்த இடத்தில்தான் தற்போதைய கூட்டுக் கோயில் அமைந்துள்ளது.

Kim Eang Tong
கிம் இயங் டொங்

பௌத்தம், தாவிசம் ஆகிய இரு சமயங்களின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட கிம் இயாங் சமயப் பிரிவைச் சேர்ந்த ஒரே சிங்கப்பூர்க் கோயில் கிம் இயங் டொங். இன்றைய மேஃபிளவர் வட்டாரத்தில் அமைந்திருந்த சியோக் சுவா (ஹாக்கியன் மொழியில் "பாறைக் குன்று") கிராமத்தில் 1961ல் இக்கோயில் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஹக்கா சமூகத்தினரின் பிரத்யேகக் கோயிலாகத் திகழ்ந்த கிம் இயங் டொங் கோயில், 1950களிலிருந்து மற்ற சமூகத்தினரையும் ஏற்கத் தொடங்கியது.

Leng San Giam
லெங் சான் கியாம்

சீனாவின் ஃபூஜியன் மாநிலத்திலுள்ள யொங்ச்சுன் மாவட்டத்தைச் சேர்ந்த "சியூ" எனும் குடும்பப் பெயர் கொண்ட குடியேறிகள், 1950களில் லெங் சான் கியாம் கோயிலை அமைத்தனர். இன்றைய அங் மோ கியோ அவென்யூ 3க்கு நேரிணையாக அமைந்திருந்த முன்னாள் செங் சான் சாலையில் கோயிலை அவர்கள் கட்டினர். "ஃபா சூ கொங்" தெய்வ வழிபாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இக்கோயில், அற்புதங்களை

நிகழ்த்தித்தரும் என்று நம்பப்பட்டது. சூதாட்டத்திற்கு “அதிர்ஷ்ட எண்கள்” பெற விரும்புயோரும் இக்கோயிலை நாடிச் சென்றனர்.



செங் சான் சாலையில் அமைந்திருந்த காவ் லின் கொங் கோயிலின் தெருக்கூத்து மேடை, தேதியில்லை
*காவ் லின் கொங் கோயிலுக்கு நன்றி*



கிம் இயங் டொங் கோயிலின் புதிய அமைவிடத்தில் சடங்கு நடைபெறுகிறது, 1983
*கிம் இயங் டொங் கோயிலுக்கு நன்றி*



ஆரம்பத்தில் அங் மோ கியோ அவென்யூ 1ல் அமைந்திருந்த கூட்டுக் கோயில் கட்டடம், 1983

**Block 259, The "Clover Block"**
**"க்ளோவர் புளோக்" என்றழைக்கப்பட்ட புளோக் 259**

வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) கட்டியவீடுகளில், வட்டவடிவில் அமைக்கப்பட்ட ஒரே அடுக்குமாடிக் கட்டடம் புளோக் 259. இது 1981ல் கட்டி முடிக்கப்பட்டது. 1970களின் பிற்பகுதியில் வீவக மேற்கொண்ட முன்னோட்டத் திட்டத்தின்கீழ், தனித்தன்மையுடன் வடிவமைத்துக் கட்டப்பட்ட ஏழு அடுக்குமாடிக் கட்டடங்களில் இதுவும் ஒன்று. பொதுக் குடியிருப்பு நகரங்களில் பலவிதமான கட்டடக்கலைகளை உருவாக்குவதும், இதுபோன்ற அடையாளச் சின்னங்களின்மூலம் வலுவான அடையாள உணர்வை வளர்ப்பதும் இத்திட்டத்தின் நோக்கம்.

பெரும்பாலான பொது அடுக்குமாடிக் கட்டடங்களுக்குச் செய்ததைப்போல் வெற்றுச் செங்கற்களைப் பயன்படுத்தாமல், புளோக் 259க்குத் திடமான செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. படுக்கை அறைகள் நாள் முழுவதும் குளுமையாக இருப்பதை உறுதிசெய்ய, அவை வடக்கு அல்லது தெற்கு நோக்கி அமைந்திருக்கும் வகையில் கட்டடத்தை வீவக வடிவமைத்தது. அந்தக் காலகட்டத்தில் கட்டப்பட்ட வழக்கமான ஐந்தறை வீடுகளை விட பெரிய அளவில் அறைகள் வடிவமைக்கப்பட்டன. கட்டடத்தின் வடிவத்திற்கு ஏற்ப, அதன் உச்சியிலிருந்த தண்ணீர்த் தொட்டியும் வட்டவடிவில் கட்டப்பட்டது.


இந்தக் கட்டடம் அறிமுகமானபோது, மாறுபட்ட கருத்துகள் கிடைத்தன. கட்டடத்தின் தனித்துவமான வடிவமைப்பைச் சிலர் பாராட்டினர். மற்ற சிலரோ வீடுகளைக் கட்டுவதற்கான அதிக செலவு, வளைவான சுவர்களுக்கு ஏற்ப அறைகலன்களை வடிவமைப்பதற்கும் வீட்டைப் புதுப்பிப்பதற்கும் ஆகும் கூடுதல் செலவு ஆகியன குறித்து அக்கறை தெரிவித்தனர்.

ஆகாயத்திலிருந்து பார்க்கும்போது "க்ளோவர்" செடிபோலத் தோன்றுவதால் "க்ளோவர் புளோக்" என்றழைக்கப்பட்ட புளோக் 259, காலப்போக்கில் அங் மோ கியோவின் அடையாளச் சின்னமாக உருவெடுத்துள்ளது. அதிலுள்ள வீடுகள் இன்றும் பெரிதும் நாடப்படுகின்றன.



கட்டுமானத்திலிருந்த புளோக் 259, 1981

*ஃபிலிப் ஹோவுக்கு நன்றி*



புதிதாக அறிமுகமான புளோக் 259, 1981

*வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திற்கு நன்றி*



புளோக் 259ல் உள்ள ஒரு வீட்டின் வளைவான உட்புறம், தேதியில்லை

*ஃபிலிப் ஹோவுக்கு நன்றி*

---

**Teachers' Housing Estate**

**ஆசிரியர் குடியிருப்புப் பேட்டை**

ஆசிரியர் குடியிருப்புப் பேட்டை, சிங்கப்பூர் ஆசிரியர்கள் சங்கத்தால் 1969ல் கட்டப்பட்டது. 1960களின் பிற்பகுதியில், ஆசிரியர்களுக்கான ஒரு மனமகிழ் மன்றத்தைச் சங்கம் அமைக்க விரும்பியது. ஆனால், மத்திய வட்டாரத்தில் நிலப்பகுதி வாங்க சங்கத்திடம் வசதியில்லை. அதனால், நில மேம்பாட்டாளருடன் சேர்ந்து புறநகர்ப் பகுதியில் குடியிருப்புப் பேட்டை கட்டி, வீடுகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் லாபத்தைக் கொண்டு மனமகிழ் மன்றம் கட்ட முடிவெடுத்தது.

இந்த இடத்தின் சுற்றுவட்டாரத்தில் பெரும்பகுதி பண்ணை நிலமாக இருந்தது. அதோடு, இயோ சூ காங் சாலையிலிருந்து மண் தடங்கள் வாயிலாக மட்டுமே இந்த இடத்தை அடைய முடிந்தது. இருந்தாலும், சங்கம் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தது. இடம் ஒதுக்குப்புறமாக இருந்தாலும், ஆசிரியர்கள் வீடு வாங்க ஊக்குவிப்பாக, நிதி அமைச்சு அவர்களுக்கு வீட்டுக் கடனாக $5 மில்லியன் கொடுத்தது.

ஆசிரியர்கள் குடியிருப்புப் பேட்டையைக் கட்டி முடிப்பதற்கு 18 மாதங்களுக்கு மேலானது. அந்தக் காலகட்டத்தில் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த லிம் கிம் சான், 1971ல் குடியிருப்புப் பேட்டையை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். அங்கு கட்டப்பட்டிருந்த 256 வீடுகளில், 180 வீடுகளை ஆசிரியர்கள் வாங்கினர். குடியிருப்புப் பேட்டையின் சாலைகளுக்கு டு ஃபூ, ரபீந்திரநாத் தாகூர், முன்ஷி அப்துல்லா போன்ற இலக்கியத்துறை பிரபலங்களின் பெயர்கள் வைக்கப்பட்டன.

குடியிருப்புப் பேட்டையை வெற்றிகரமாகக் கட்டி முடித்த பிறகு, மனமகிழ் மன்றம் கட்டுவதற்காக 1972க்கும் 1973க்கும் இடையில் குடியிருப்பாளர்களிடமிருந்து சங்கம் நிதி திரட்டத் தொடங்கியது. “டீச்சர்ஸ் சென்டர்” (ஆசிரியர்கள் நிலையம்) என்றழைக்கப்பட்ட அந்த மன்றம், கருத்தரங்கு அறைகள், பன்னோக்கு மண்டபம், நூலகம், சிற்றுண்டியகம், சுவர்ப்பந்து திடல், நீச்சல் குளம் போன்ற வசதிகளுடன் 1973ல் கட்டி முடிக்கப்பட்டது.

இன்று, ஆசிரியர் குடியிருப்புப் பேட்டையின் ஆரம்பகாலக் குடியிருப்பாளர்களில் பலரும் இன்னமும் அங்கு வாழ்ந்து வருகின்றனர். 2004ல், குடியிருப்புப் பேட்டை சீரமைக்கப்பட்டது. பூங்காக்கள் புதுப்பிக்கப்பட்டு, புதிய சாலையோர வசதிகள் அமைக்கப்பட்டன.




ஆசிரியர் குடியிருப்புப் பேட்டையின் கட்டுமானத் தளத்தில் வீடுகளை விளம்பரப்படுத்தும் அறிவிப்புப்பலகை, 1968

*இயோ பெங் சியாவின், "ஆசிரியர் குடியிருப்புப் பேட்டை பற்றிய அறிக்கை," ஆசிரியர்கள் அரங்கு எண். 1 (ஏப்ரல்-மே 1968) (சிங்கப்பூர்: சிங்கப்பூர் ஆசிரியர்கள் சங்கம், 1968), 12. (சிங்கப்பூர் தேசிய நூலகத்திலிருந்து பெறப்பட்டது, வரிசை எண். RCLOS 331.88113711 TF) பதிப்பிலிருந்து மறுபிரசுரிக்கப்பட்ட படம்.*




ஆசிரியர்கள் நிலையத்தின் அதிகாரபூர்வத் திறப்பு விழாவின்போது, துணைப் பிரதமரும் தற்காப்பு அமைச்சருமான கோ கெங் சுவீ அவர்கள், பெயர் பொறிக்கப்பட்ட பலகையைத் திறந்து வைக்கிறார், 1975

*தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*




புதிதாகக் கட்டப்பட்ட ஆசிரியர்கள் நிலையத்தில், சிங்கப்பூர் ஆசிரியர்கள் சங்கமும் அமைந்திருந்தது, 1975

*தகவல் கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



ஆசிரியர் குடியிருப்புப் பேட்டையில் உள்ள முன்ஷி அப்துல்லா அவென்யூ, சிங்கப்பூரின் துவக்கக் கால வரலாற்றுப் பதிவை எழுதிய மலாயா எழுத்தாளர் முன்ஷி அப்துல்லாவுக்குப் பின் பெயரிடப்பட்டது,, 2023

*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

---

### Church of Christ the King
### கிறிஸ்து அரசர் தேவாலயம்

கிறிஸ்து அரசர் தேவாலயம் (Church of Christ the King) 1982ல் தொடங்கப்பட்டு, 2002ல் மீண்டும் புதிதாகக் கட்டப்பட்டது. இதுவே அங் மோ கியோவில் அமைந்துள்ள ஒரே கத்தோலிக்க தேவாலயம். இந்த தேவாலயம் கட்டப்படுமுன், அங் மோ கியோவில் இருந்த

கத்தோலிக்கர்கள், அப்பர் தாம்சன் சாலையிலும் சிராங்கூன் கார்டன்ஸிலும் இருந்த தேவாலயங்களில் வழிபட்டனர். அங் மோ கியோவில் ஒரு தேவாலயம் தேவைப்படுவதை மறைமாவட்டம் 1970களில் உணர்ந்தது. எனவே, புதுநகரில் ஒரு தேவாலயத்தைக் கட்டத் தீர்மானித்தது.

புதிய தேவாலயத்திற்கு நிதி திரட்டும் பொறுப்பு பெல்ஜியப் பாதிரியார் லூயிஸ் ஃபோசியனிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் பல்வேறு கத்தோலிக்கத் திருச்சபைகளில் மூன்று ஆண்டுகளுக்குமேல் நன்கொடைகள் திரட்டினார். புதிய தேவாலயம் $3 மில்லியன் செலவில் 1982ல் கட்டி முடிக்கப்பட்டது.

காலப்போக்கில், திருச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், கட்டடம் போதுமானதாக இல்லை. இதனால், 1999ல் தேவாலயம் இடிக்கப்பட்டு, 2002ல் புதிய கட்டடம் திறக்கப்பட்டது.

தேவாலயத்தில் இரு முக்கிய கலைப்பொருட்கள் உள்ளன: தேவாலயத்தின் முகப்பில் வீற்றுள்ள கிறிஸ்து அரசர் சிலை அவற்றுள் ஒன்று. சதா சகாய மாதாவின் உருவச்சின்னம் மற்றொன்று. கிறிஸ்து அரசர் சிலை 1956ல் இந்தியாவின் கேரள மாநிலத்தில் செதுக்கப்பட்டது. யீஷூனில் அமைந்துள்ள "அவர் லேடி ஸ்டார் ஆஃப் த சீ" தேவாலயம், தனது நிதி திரட்டும் முனைப்புக்கு கிறிஸ்து அரசர் தேவாலயம் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், சிலையை அன்பளிப்பாக வழங்கியது. சதா சகாய மாதாவின் உருவச்சின்னம் 1950களைச் சேர்ந்தது. தேவாலயம் புதிதாகக் கட்டப்பட்டபோது, வழிபாட்டாளர் ஒருவர் இதனை தேவாலயத்திற்கு நன்கொடையாக வழங்கினார்.

கிறிஸ்து அரசர் தேவாலயம், அங் மோ கியோ கத்தோலிக்கச் சமூகத்தின் ஆன்மீக மையமாக இன்றும் தொடர்ந்து திகழ்கிறது.



அடிக்கல் நாட்டும் சடங்கு, 1981

*Courtesy of Church of Christ the King*
*கிறிஸ்து அரசர் தேவாலயத்திற்கு நன்றி*



முதன்முதலில் திறக்கப்பட்ட தேவாலயக் கட்டடம், 1982
*கிறிஸ்து அரசர் தேவாலயத்திற்கு நன்றி*



தேவாலய முகப்பில் வீற்றுள்ள கிறிஸ்து அரசர் சிலை, 2023
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*



தேவாலயப் பீடத்தில் அமைந்துள்ள சதா சகாய மாதாவின் உருவச்சின்னம், 2023
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

---

**Liuxun Sanhemiao**
## லியூசன் சன்ஹிமியாவ்

சாம் ஆன் ஃபூ, லொங்சூயான் ஜின்ஷுய்குவான், ஹொங் சான் சின் ஹுவாட் கோயில் சங்கம் ஆகிய மூன்று கோயில்களையும் உள்ளடக்கிய கூட்டுக் கோயிலாக லியூசன் சன்ஹிமியாவ் கோயில் 1989ல் அமைக்கப்பட்டது. இன்றைய லெண்டோர் அவென்யூவுக்கு அருகே இருந்த இயோ சூ காங்கின் லக் சன் கிராமத்தில் மூன்று கோயில்களும் முன்பு அமைந்திருந்தன. லக் சன் ஒரு விவசாய கிராமம். அங்கு வாழ்ந்தவர்களில் பெரும்பாலோர் ஹாக்கியன் மொழி பேசுபவர்கள். கிராமவாசிகள் 1980களில் மறுகுடியேற்றம் செய்யப்பட்டபோது, கோயில்கள் கூட்டிணைந்து 1988ல் தற்போதைய அமைவிடத்தைக் குத்தகைக்கு எடுத்தனர்.

<u>Sam Ann Fu</u>
<u>சாம் ஆன் ஃபூ</u>

சீனாவின் ஃபூஜியன் மாநிலத்தில் உள்ள அன்சி மாவட்டத்தைச் சேர்ந்த “சென்” குடும்பப் பெயர் கொண்ட ஹாக்கியன் குடியேறிகள், 1900களின் ஆரம்பகாலத்தில் சாம் ஆன் ஃபூ கோயிலைத் தொடங்கினர். இக்கோயிலின் மூல தெய்வங்கள் “மூன்று சென் சகோதரர்கள்”. தற்போது அங் மோ கியோ கூட்டுக் கோயிலில் அமைந்துள்ள லெங் சான் கியாம் கோயிலும் இந்தக் கோயிலும் நெருங்கிய தொடர்புடையவை.

விழாக்காலங்களில், இந்தக் கோயில்கள் ஒன்று மற்றதன் தெய்வங்களை சிறப்பு வருகையாளர்களாக வரவேற்கின்றன.

Longxuyan Jinshuiguan
## லொங்சூயான் ஜின்ஷுய்குவான்

லொங்சூயான் ஜின்ஷுய்குவான் கோயில் 1940களில் தொடங்கப்பட்டது. சீனாவின் ஃபூஜியன் மாநிலத்தின் நன் ஆன் மாவட்டத்தில் உள்ள சியாங்யுன் நகரைச் சேர்ந்த "ஓங்" குடும்பப் பெயர் கொண்ட ஹாக்கியன் குடியேறிகளின் மூதாதையர் கோயில் இது. இந்தக் குடியேறிகள் சிங்கப்பூரில் இதுபோன்ற பல்வேறு கோயில்களை அமைத்துள்ளனர். இந்தக் கோயிலை, ஹவ்காங்கில் இருந்த வேறொரு மூதாதையர் கோயிலின் தூபத்தைப் பயன்படுத்தி லக் சன் கிராமவாசிகள் தொடங்கினர்,

Hong San Chin Huat Temple Association
## ஹொங் சான் சின் ஹுவாட் கோயில் சங்கம்

ஹொங் சான் சின் ஹுவாட் கோயில் சங்கம் 1989ல் அமைக்கப்பட்டது. சீனாவின் ஃபூஜியன் மாநிலத்தின் நன் ஆன் மாவட்டத்திலிருந்து வந்த குடியேறிகளால் தொடங்கப்பட்ட மூன்று பழைய கோயில்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. ஃபெங் ஷான் டாங், ஜின் ஃபா டியன், சுவான் ஷெங் கொங் ஆகிய அம்மூன்று கோயில்களும், லக் சன் கிராமத்தில் அமைந்திருந்தன. முன்னாள் கிராமவாசிகள் இன்றும் இக்கோயிலில் ஒன்றுகூடுகின்றனர்.




லக் சன் கிராமத்தில் ஆரம்பத்தில் கட்டப்பட்ட சாம் ஆன் ஃபூ கோயிலும் அதன் சுற்றுவட்டாரமும், தேதியில்லை
சாம் ஆன் ஃபூவுக்கு நன்றி



லொங்சூயான் ஜிங்ஷுய்குவான் கோயிலில் நடைபெற்ற இடப்பெயர்வுச் சடங்கு, 1989

*லொங்சூயான் ஜிங்ஷுய்குவான் கோயிலுக்கு நன்றி*



லக் சன் கிராமத்தின் ஃபெங் ஷான் டாங் கோயிலில் நடைபெற்ற விழாவின் ஓர் அங்கமான பொம்மலாட்டக் காட்சி, தேதியில்லை

*ஹொங் சான் சின் ஹுவாட் கோயில் சங்கத்திற்கு நன்றி*